

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.9.2025) முகாம் அலுவலகத்தில், சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் தலைமை இயக்குநரும், மூத்த பத்திரிகையாளருமான ஏ.எஸ்.பன்னீர்செல்வன், தி.மு.க. முப்பெரும் விழாவில் "முரசொலி செல்வம்" விருது வழங்கப்படவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.



வருகிற 17–9–2025 அன்று கரூர் கோடாங்கிபட்டியில் நடைபெற உள்ள தி.மு.க. முப்பெரும் விழாவிற்கான அழைப்பிதழை, தமிழ்நாடு துணை முதலமைச்சர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமைக் கழக மேலாளர் ஆர்.பத்மநாபன் ஆகியோர் அளித்தபோது எடுத்த படம்.

# தமிழ்நாட்டின் இன்றைய பொறியாளர்களை, நாளைய தொழில்முனைவோராக உயர்த்துவோம்!

## சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்ற மாநாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, செப். 15 –**

**சென்னை, நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில், சர்வதேச தமிழ்ப் பொறியாளர் மன்ற மாநாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

அப்போது அவர், "சர்வதேச தமிழ்ப் பொறியாளர் மன்றம், தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும், அயல்நாட்டுத் தமிழ்ப் பொறியாளர்களுக்கும் பாலமாக செயல்பட்டு வருகிறது. இன்றைய பொறியாளர்களை, நாளைய தொழில் முனைவோராக உயர்த்த, நம் திராவிட மாடல் அரசும் சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்றமும் ஒருங்கிணைந்து செயல்படுவோம்" என சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்ற மாநாட்டில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். நிறைய அரசியல் மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளேன். ஆனால், முதல்முறையாக பொறியாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பைத் தந்த சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்றத்தினருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

நேற்றைக்கு (12.09.2025) தொடங்கி, இரண்டு நாட்களாக இந்த மாநாடு சிறப்பாக நடந்துகொண்டு இருக்கிறது.

தொழில்நுட்ப அமர்வுகள், கண்காட்சிகள் என்று ஏராளமான நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு, இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. குறிப்பாக, பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இங்கே கையெழுத்தாகியிருக்கின்றன. பொதுவாகவே, பொறியாளர்கள் என்று சொன்னாலே, எதையும் நேர்த்தியாகச் செய்யக் கூடியவர்கள் என்று சொல்வார்கள். எனவே, இங்கு வந்திருக்கின்ற அத்தனைபேரும் நேர்த்தியாகச் செயலாற்றக் கூடியவர்கள். அதிலும் தமிழ்ப் பொறியாளர்களைப் பற்றி சொல்ல வேண்டிய அவசியமில்லை.

கிட்டத்தட்ட 1,000 வருடத்திற்கு முன்பே மிகப்பெரிய கட்டுமானங்கள், அணைகளைக் கட்டிய பெருமை நம் தமிழர்களுக்கு உண்டு. இன்றைக்கு உலகத்தில் எந்த நாட்டுக்குச் சென்றாலும், தமிழ்ப் பொறியாளர்கள்தான் மிகப்பெரிய நிறுவனங்களில், மிகப்பெரிய பொறுப்புகளில் இருக்கக்கூடியவர்கள் நம் தமிழ்ப் பொறியாளர்கள்தான. இந்த சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்றத்தில், 5 ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள், 20க்கும் அதிகமான நாடுகளில் இருந்து வந்திருக்கிறீர்கள் என்பதைக் கேள்விப்பட்டபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

**15 ஆயிரம் கோடி ரூபாய்**

சமீபத்தில், நம் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்குச் சென்றபோது, உங்களில் பல பேர் முதலமைச்சரை சந்தித்ததாகக் கேள்விப்பட்டேன்.



அன்போடு, பாசத்தோடு முதலமைச்சர் அவர்களை வரவேற்று புகைப்படம் எல்லாம் எடுத்துக் கொண்டீர்கள். உங்கள் அன்போடும் ஆதரவோடும், சுமார் 15 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை, நம் முதலமைச்சர் அவர்கள் ஈர்த்து வந்திருக்கிறார்.

முதலீகள் மட்டுமல்ல, அதன் மூலமாக 18 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பையும் பெற்றுக் கொடுத்திருக்கிறார். இவை சாத்தியமானதுக்கு அரசு முயற்சிகள், முதலமைச்சரின் முயற்சிகள் இருந்தாலும், உங்களை மாதிரி வெளிநாடுகளில் இருக்கிற தமிழ் உறவுகளின் ஆதரவும், அன்பும் மிகமிக முக்கியமான காரணம். நாம் வெளிநாட்டில் அடிக்கடி சந்தித்தாலும், இன்றைக்கு நம் தாய்த் தமிழ்நாட்டில் சந்திக்கின்ற வாய்ப்பு இந்த நிகழ்ச்சியின் மூலமாக கிடைத்திருக்கிறது.

பொதுவாக, மற்ற துறைகளில் வேலை செய்பவர்கள் எல்லாம், அவர்களின் துறையில் நிபுணர்களாக இருப்பார்கள். அதில் வேலை பார்ப்பார்கள். ஆனால், பொறியாளர்கள் மட்டும்தான், அனைத்துத் துறைகளிலும் நிபுணர்களாக இருப்பார்கள். அந்த அளவுக்கு பன்முகத் திறமைகள் கொண்ட நபர்கள் இங்கு வந்திருக்கின்ற பொறியாளர்களாகிய நீங்கள்தான்.

**டாக்டர் கலைஞர்தான்**

இன்றைக்கு உலகம் முழுவதும் லட்சக்கணக்கான தமிழ்ப் பொறியாளர்கள் இருக்கிறீர்கள். அதற்கான விதையை முதலில் போட்டவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். ஏனெனில், தமிழ்நாடு முழுக்க பொறியியல் கல்லூரிகளை அதிகளவில் திறந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர். கல்லூரிகளைத் தொடங்கியதோடு மட்டும் நிற்கவில்லை. பொறியியல் படிப்பதற்கான நுழைவுத் தேர்வை ரத்து செய்ததும் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். நுழைவுத் தேர்வு ரத்து மட்டுமல்ல ஏழை - எளிய மாணவர்கள், பொறியியல் படிக்க வேண்டும் என்று, முதல் தலைமுறையாகப் படிக்க வருகிறவர்களுக்கு அவர்களின் கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற நிலைமையை ஏற்படுத்தியவரும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

பொறியியல் கல்லூரிகளை மட்டுமல்ல, கலைஞர் அவர்கள் உருவாக்கிய 'டைடல் பார்க்', 'ஐ.டி காரிடார்ஸ்', 'ஆட்டோ மொபைல் ஹப்', மூலமாக தமிழ்நாட்டுப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துக்கொண்டு இருக்கிறது. உங்களில் பலர், மதுரையிலிருந்தும், சென்னையிலிருந்தும் பணியைத் தொடங்கி ஆன் சைட் மூலமாக வெளிநாடுகளுக்கு சென்றிருக்கிறீர்கள். `திராவிடத்தால் வாழ்ந்தோம்' என்று நீங்கள் பகிர்ந்துகொண்ட உங்களின் வெற்றிக் கதை வீடியோக்களை நானும் பல முறை பார்த்தேன். உங்கள் ஒவ்வொருவரின் வெற்றியும் மற்றவர்களுக்கு எல்லாம் மிகப்பெரிய உத்வேகமாக அமைந்திருக்கிறது. உங்களைப்போல, இன்னும் பல ஆயிரம் பேரை உருவாக்க வேண்டும் என்று 3 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகளை கொடுத்திருக்கிறோம். அது மட்டுமல்ல, 6 ஆயிரம் பேருக்குப் பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று நம் அரசு சார்பில், இங்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. அதற்கு என் வாழ்த்துகள்.

**வெளிநாட்டில் பயிற்சி**

எல்லாவற்றுக்கும் மேலாக, அரசு பள்ளியில் படித்துவிட்டு, உயர்கல்விக்காக வெளிநாடு செல்கின்ற மாணவர்களின் முழு கல்விக் கட்டணச் செலவையும் அரசே ஏற்கும் என்கிற முக்கியமான திட்டத்தையும் நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார். நான் முதல்வன் திட்டம், சாரணர் இயக்கம் (Scout) மூலமாக, ஆண்டுக்கு 100 மாணவர்களை தேர்ந்தெடுத்து, வெளிநாட்டுக்குச் சென்று பயிற்சியும், வேலைவாய்ப்பும் நம் அரசு கொடுத்துக் கொண்டு இருக்கிறது.

ஆகவே, இதுபோல மாணவர்கள் சாதிக்க நீங்கள் அனைவரும் வழிகாட்ட வேண்டும். வெளிநாடு வாழ் தமிழர்கள் உங்களின் நலனுக்காக, நம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததுமே, அயலகத் தமிழர் நலனுக்காக ஒரு தனி அமைச்சகமே உருவாக்கினார். முக்கியமாக 2 அல்லது 3 தலைமுறையாக வெளிநாடுகளில் இருக்கிற அயலகத்தமிழ் வம்சாவளியினர் தமிழ்நாட்டின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று, வேர்களைத் தேடி திட்டத்தையும் நம் முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். நீங்கள் தொடர்ந்து உங்களின் யோசனைகள் மற்றும் ஆதரவை நம் அரசுக்கு வழங்க வேண்டும்.

நீங்கள் பணி செய்கிற நாடுகளுக்கு வருகிற, நம் தமிழ்ப் பிள்ளைகளுக்கு, நீங்கள் உற்றத்துணையாக இருந்து, அவர்களின் வாழ்க்கையிலும் ஒளியேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நீங்கள் அயல்நாடுகளில் வாழ்ந்தாலும், உங்களைத் தமிழ்நாடும், தமிழ்நாட்டு அரசும், தமிழ் மக்களும் என்றைக்கும் மறக்க மாட்டார்கள். உங்களைப் போன்ற இன்னும் பல நூறு பொறியாளர்களை உருவாக்கவும், அப்படி உருவாக்குகின்ற பொறியாளர்களை தொழில்முனைவோர்களாகவும் உயர்த்த, நம் அரசு என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்கும்.

தமிழ்நாடும் தமிழ்ச்சமுதாயமும் செழிக்கட்டும். சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்றத்தின் பணிகள் சிறக்கட்டும் என்று சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் வாழ்த்திப் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சா.சி.சிவசங்கர், மாலத்தீவு முன்னாள் அமைச்சர் ஃபயாஸ் இஸ்மாயில், குவைத் பொது போக்குவரத்து நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மன்சூர் அலி சையத், சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்றத்தின் தலைவர் கிருஷ்ண ஜெகன், ஃபக்கீரின் ஆலியா பல்கலைக்கழகத்தின் தலைவர் மன்சூர் அல் அலி, டெக்கான் இன்ஜினீயரிங் அண்டு கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் லட்சுமணன், சர்வதேச தமிழ்ப் பொறியாளர்கள் மன்றத்தின் மேலாண்மை இயக்குநர் செல்வம், சங்கர் ஐ.ஏ.எஸ்., ராமன் ஐ.ஏ.எஸ்., நிர்மல்ராஜ் ஐ.ஏ.எஸ்., அஜய் யாதவ் ஐ.ஏ.எஸ்., கிராந்திகுமார் ஐ.ஏ.எஸ்., உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---


பாகம் – 119 : பா.ஸ்ரீநாத், பி–1, நெய்தல் நகர், எர்ணாவூர், சென்னை.
பாகம் – 120 : கு.பிரதீப், 5/3, முதல் தெரு, கலைஞர் நகர், விம்கோ நகர், சென்னை.
பாகம் – 121 : ஈ.சாலோம் சாக்ராக், 5, 1–வது தெரு, சின்ன எர்ணாவூர், விம்கோ நகர், சென்னை.
பாகம் – 122 : கி.சதீஷ். 610/18, காந்தி நகர், விம்கோ நகர், திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 123 : ம.வசந்த், 24, திருவள்ளுவர் நகர், விம்கோ நகர், திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 172 : பு.பிரகாஷ்ராஜ், 66/21–ஏ, மாணிக்கம் நகர், திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 173 : ர.புவனேஸ்வரன், 633/4, கோபி நகர், திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 174 : ரா.பரத்குமார், 47, 174, 5–வது தெரு, ஜீவல்லால் நகர் , திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 175 : செ.கார்த்திக், 662, சௌந்தரபாண்டி நகர், திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 176 : சா.பி.சுதார்த், 700/8, திருமலை நகர், திருவொற்றியூர் சென்னை.

**6–வது வட்டம்**

**அமைப்பாளர் :** க.வினேஷ், 99–பி, டாக்டர் கலைஞர் நகர், 11–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) லோ.பாலமுருகன், 28/26, கலைவாணர் நகர், திருவொற்றியூர், சென்னை. (2) சே.ராஜேஷ், 5/6, சண்முகபுரம் விஸ்தரிப்பு, 6–வது தெரு, திருவொற்றியூர், சென்னை. (3) கி.வினோத், 25, சிவசக்தி நகர், 2–வது தெரு, திருவொற்றியூர், சென்னை. (4) க.நவீன் குமார், 5/10, சண்முகபுரம் விஸ்தரிப்பு, 8–வது தெரு, திருவொற்றியூர், சென்னை. (5) கோ.கவீன் ராஜ், 9, டாக்டர் கலைஞர் நகர், 1–வது தெரு, திருவொற்றியூர், சென்னை. (6) ச. சுதர்சனன், 43/23, 2–வது தெரு, தியாகி சத்தியமூர்த்தி நகர், திருவொற்றியூர், சென்னை. (7) செ.லிங்கராஜ், 1/10, சரஸ்வதி நகர், 11–வது தெரு, சென்னை.

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 130 : பா.சத்தியநாராயணன், 19, 7, டி.கே.எஸ். நகர், 1–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 132 : க. சஞ்சய்குமார், 5/10, சண்முகபுரம் விஸ்தரிப்பு, 8–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 133 : அ.பார்த்திபன், 5/7, 2–வது தெரு, காட்டு பொன்னியம்மன் நகர், திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 135 : ப.பாலாஜி, 2/3, சரஸ்வதி நகர், 5–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 136 : ர.விக்னேஷ், 9/4, சரஸ்வதி நகர், 10–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 137 : அ.சாகர்குமார், 6/22, தியாகி சத்தியமூர்த்தி நகர், 4–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 138 : தா.காஜா மொய்தீன், 4/44, தியாகி சத்தியமூர்த்தி நகர், 4–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 139 : கோ.கண்ணன், 90/5, 3–வது தெரு, டி.கே.பி.நகர், திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 141 : கோ.சுவீன்ராஜ், 9, டாக்டர்.கலைஞர் நகர், 1–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 142 : பா.எழில்ராஜ், டாக்டர்.கலைஞர் நகர், 9–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 143 : கார்த்திகேயன், 24, ராஜா சண்முகம் நகர், 1–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 144 : வெ.யுவனேஷ், 4, ராஜா சண்முகம் நகர், 6–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 145 : சீ.ஸ்ரீராம், 2–ஏ, ராஜா சண்முகம் நகர், 6–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 148 : பெ.சுரேஷ்குமார், 8/163, டாக்டர்.அம்பேத்கர் நகர், திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 147 : ர.கணேஷ், 5/65, 3–ஏ, டாக்டர்.அம்பேத்கர் நகர், பிரதான சாலை, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 149 : செ.லிங்கேஸ்வர், 236, 80, டாக்டர்.அம்பேத்கர் நகர், பிள்ளையார் கோயில் தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 146 : செ.அந்தோணி லாரன்ஸ், 6–ஏ, ராஜா சண்முகம் நகர், 14–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.
பாகம் – 150 : து.தனபால், 17, சிவசக்தி நகர், 1–வது தெரு, திருவொற்றியூர், சென்னை.

**திருவொற்றியூர் மத்தியப் பகுதி**

**18–வது வட்டம்**

**அமைப்பாளர் :** ம.பிரதீப், 2/16–ஏ, அறிஞர் அண்ணா தெரு, 2– வது சந்து, மணலி, சென்னை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.கிரிதரன், 8/36, தில்லைபுரம் 2–வது தெரு, மணலி, சென்னை. (2) பா.நவீன்குமார், 10, ஜாகீர் உசேன் தெரு, 1–வது குறுக்குச் சந்து, மணலி, சென்னை. (3) க.உதயராஜ் , 16, கலைஞர் நகர், லப்பைமேடு, மணலி, சென்னை. (4) செ.அருண்ராஜ், 160, சி.பி.சி.எல். நகர், முதல் தெரு, மணலி, சென்னை. (5) கொ.ஜோசப், 1, இந்திரா காந்தி தெரு, மணலி, சென்னை. (6) பா.ஸ்ரீநாத், 5, அறிஞர் அண்ணா 1–வது சந்து, மணலி, சென்னை. (7) சு.மதன், 13, ஈஸ்வரன் கோயில் தெரு, அரிகிருஷ்ணபுரம், மணலி. (8) மு.சுதர்சன், 39, பெருமாள் கோயில் தெரு, அரிகிருஷ்ணபுரம், மணலி, சென்னை.

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 1 : செ.நந்தகுமார், 11/29, 5–வது தெரு, டாக்டர் கலைஞர் நகர், மணலி , சென்னை.
பாகம் – 2 : மு.கார்த்திக், 8/36, தில்லைபுரம் 2–வது தெரு, மணலி, சென்னை.
பாகம் – 3 : ஹ.வினோத்குமார், 8, ஜீவானந்தம் தெரு, இடப்பாளையம், மணலி, சென்னை.
பாகம் – 4 : சு.திலீபன், 9, சர்.சி.வி.ராமன் தெரு, மணலி, சென்னை.
பாகம் – 5 : ஜெ.ராகேஷ், 24, கிராம தெரு, முதல் சந்து, மணலி, சென்னை.
பாகம் – 6 : ச.சஞ்சீவ்குமார், 6/31, அறிஞர் அண்ணா தெரு, 1–வது சந்து, மணலி, சென்னை.
பாகம் – 7 : கு.நந்தகுமார், 14, சிம்லாபுரம், 1–வது தெரு, மணலி, சென்னை.
பாகம் – 8 : தெ.சுரேஷ்குமார், 250, திருவள்ளூர் தெரு, மணலி, சென்னை.
பாகம் – 9 : மூ.ராஜேந்திரன், 14, ஜாகீர் உசேன் 1–வது தெரு, மணலி, சென்னை.
பாகம் – 10 : சந்தோஷ், 1, இந்திரா காந்தி தெரு, மணலி, சென்னை
பாகம் – 30 : து.பிரேம்குமார், 296, 13–வது குறுக்குத் தெரு, சி.பி.சி.எல். நகர், மணலி, சென்னை.
பாகம் – 31 : ச.குமரேசன், 254, 12–வது குறுக்குத் தெரு, சி.பி.சி.எல். நகர், மணலி, சென்னை.
பாகம் – 32 : சி.ஸ்ரீதர், 472, சி.பி.சி.எல். நகர், மணலி, சென்னை.

**20–வது வட்டம்**

**அமைப்பாளர் :** ம.சுரேஷ், 45, சீனிவாச பெருமாள் கோயில் தெரு, மேலாண்டை தெரு, பெரிய தோப்பு, மணலி, சென்னை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வி.வினோத்குமார், 29, சந்தானகிருஷ்ணன் சாலை, பெரியதோப்பு, மணலி, சென்னை. (2) ச.சர்மா, 118, சீனிவாச பெருமாள் கோயில் தெரு, கீழண்டை, 3–வது குறுக்குத் தெரு, மணலி, சென்னை. (3) ரா.சதீஷ், 7/10, புதிய எம்.ஜி.ஆர் நகர், 1–வது தெரு, மணலி, சென்னை. (4) அ.கார்த்திக், 23பி, சீனிவாச பெருமாள் கோயில் தெரு, பெரிய தோப்பு, மணலி, சென்னை. (5) கே.பி.ஆதித்யா, 20, சொக்கம்மாள் குளத் தெரு, பெரிய தோப்பு, மணலி, சென்னை. (6) து.சுரேஷ், 87, சின்னமாத்தூர் சாலை, கால்தோட்டம், மணலி, சென்னை. (7) கோ.அஜித், 19–டி, ம.பொ.சி தெரு, மணலி, சென்னை. (8) சு.ஸ்ரீதர், 2,21, ராஜீவ் காந்தி தெரு, மணலி, சென்னை.

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 21 : ஏ.குணசேகர், 38, பலராமன் தெரு, பெரியதோப்பு, மணலி, சென்னை.
பாகம் – 22 : மா.மணிகண்டன் ,13, லால் பகதூர் சாஸ்திரி தெரு, பெரியதோப்பு, மணலி, சென்னை.
பாகம் – 23 : கோ.குமார், 41,எஸ்.பி.கோயில் தெரு, பெரியதோப்பு, மணலி, சென்னை.
பாகம் – 24 : அ.ஜாபர் ஷெரீஃப், 107, சீனிவாச பெருமாள் கோயில் தெரு, பெரியதோப்பு மணலி, சென்னை.
பாகம் – 25 : கா.நந்தகுமார், 40–டி. சீனிவாச பெருமாள் கோயில் தெரு, கீழாண்டை தெரு, பெரிய தோப்பு, மணலி, சென்னை.
பாகம் – 26 : ந.கார்த்திக், 29, சந்தானகிருஷ்ணன் சாலை, மணலி, சென்னை.
பாகம் – 27 : நா.ஜோதிபாசு, 48, சின்னமாத்தூர் சாலை, மணலி, சென்னை.
பாகம் – 28 : ம.சீனிவாசன், 6–இ, புதிய எம்.ஜி.ஆர் தெரு, மணலி, சென்னை.
பாகம் – 29 : த.குமார், 63, ஜே.ஜே. நகர், மணலி, சென்னை.

**21–வது வட்டம்**

**அமைப்பாளர் :** மு.ஆகாஷ், 5, சந்நிதி தெரு, மணலி, சென்னை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.கலையரசன், 61/ஏ, திரு.வி.க தெரு, மணலி, சென்னை. (2) அ.லோகேஷ்குமார், 7, எஸ்.எஸ்.கே. தெரு, மணலி, சென்னை. (3) அ.தினேஷ், 135, டாக்டர் அம்பேத்கர் தெரு, மணலி, சென்னை. (4) மு.சிலம்பரசன், 52, திரு.வி.க. தெரு, மணலி, சென்னை. (5) மு.கண்ணன், 55/1, திரு.வி.க. தெரு, மணலி, சென்னை. (6) ரா.புருஷோத்தமன், 50ஏ, பி.ஆர்.கே சர்மா தெரு, மணலி, சென்னை.

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 11 : மு.கர்ணா, 22, டாக்டர் ராஜேந்திர பிரசாத் தெரு, மணலி, சென்னை.
பாகம் – 12 : வி.வினோத்குமார், 21, திருவேங்கடம் தெரு, மணலி, சென்னை.
பாகம் – 13 : எ.ஹரீஷ், 15,எட்டியப்பன் தெரு, மணலி, சென்னை
பாகம் – 14 : கா.அஜீத்குமார், 10, திரு.வி.க. தெரு ,மணலி, சென்னை.
பாகம் – 15 : மு.அபிஷேக், 5, சந்நிதி தெரு, மணலி, சென்னை.
பாகம் – 16 : ரா.தமிழரசன், 18,பி.ஆர்.கே.சர்மா தெரு, மணலி, சென்னை.
பாகம் – 17 : ஞா.சாமுவேல், 37, டாக்டர் அம்பேத்கர் தெரு, மணலி, சென்னை.
பாகம் – 18 : நெ.சூர்யா, 135, நெடுஞ்செழியன் தெரு, மணலி, சென்னை.
பாகம் – 19 : பா.பார்த்திபன், 6, என்.எஸ்.கே. தெரு, மணலி, சென்னை.
பாகம் – 20 : ஏ.மும்மூர்த்தி, 31, தாமரைக்குளம், தெரு, மணலி, சென்னை.

**22–வது வட்டம்**

**அமைப்பாளர் :** சா.செந்தில், 2, ரத்தினம் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மோ.கோபிராஜ், 51, கண்ணாயிரம் தெரு, கொல்லை மேடு, சின்னசேக்காடு, மணலி, சென்னை. (2) ர.மகேஷ், 26, புத்தபிரான் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை. (3) எ.மோகன், 79/4. பெருமாள் கோயில் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை. (4) எஸ்.ஜீவாநந்தன், 9/3, ரத்தினம் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை. (5) லோ.பாஸ்கர், 14, கண்ணபிரான் கோயில் தெரு, கக்கன்புரம், சின்னசேக்காடு, மணலி, சென்னை. (6) ர.அரவிந்தன், 20, சின்னக்கண்ணு தெரு, அவுரிக்கொல்லை மேடு, சின்னசேக்காடு, சென்னை. (7) மு.ராகேஷ், 16, கண்ணபிரான் கோயில் தெரு, கக்கன்புரம், சின்னசேக்காடு, சென்னை.

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 33 : ர.சுனில்குமார், டி–1, முனுசாமி தெரு, சின்னசேக்காடு மணலி, சென்னை.
பாகம் – 34 : மோ.கிரிஆனந்த், 16, ராஜி தெரு, சின்னசேக்காடு மணலி, சென்னை.
பாகம் – 35 : செ.யுகேஷ்குமார், 64, பார்த்தசாரதி தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை.
பாகம் – 36 : ம.சுரேஷ், 19, சந்திரம்மன் கோயில் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை.
பாகம் – 37 : மா.பிரதப், 37, திருவள்ளுவர் தெரு, சின்னசேக்காடு தெரு, மணலி, சென்னை.
பாகம் – 38 : டி.கே.குகன், 3/9, ரத்தினம் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை.
பாகம் – 39 : அ.சுடர்ஒளி, 35,7, புத்தபிரான் தெரு, சின்னசேக்காடு தெரு, மணலி, சென்னை.
பாகம் – 40 : பா.பவேஷ், மாணிக்கவாசகர் தெரு, சின்னசேக்காடு, மணலி,சென்னை.
பாகம் – 41 : ச.குணா, 12, வேதகிரி தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை.
பாகம் – 42 : மு.சையது மீரா, 10, கிருஷ்ண 4–வது குறுக்குத் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை.
பாகம் – 43 : ர.காமேஷ்குமார், 3, வேலு தெரு, கக்கன்புரம், சின்னசேக்காடு, மணலி, சென்னை.
பாகம் – 44 : ச.சுனில், 21, அப்பராஜ், 5–வது குறுக்குத் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 13–09–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

6